## ஆயில்ய விழாவன்று அருள்மிகு நாகரம்மனுக்கு நாம் நிவேத்திய படுக்கையாக படைக்கவிருக்கும் கொழுக்கட்டைக்கு தேவைப்படும் பொருட்கள் விபரமும், தயார் செய்யும் முறையும்

1. சம்பா பச்சை அரிசி 750 கிராம்
2. நயம் கோட்டையம் சர்க்கரை 450 கிராம்
3. தேங்காய் (நடுத்தரம்) 1 எண்ணம்
4. ஏலம் 10 கிராம்
5. சுக்கு 10 கிராம்
6. மட்டி பழம் (பாகம் வந்தது) 1 எண்ணம்
7. தும்புவாழை இலை 1 (முதல் தரம்)
8. தென்னை குருத்தோலை இலைக்கு 11 வீதம் 2 எண்ணம்
9. கைதை நார் 11 எண்ணம்
10. கதம்பல் (தேங்காய் தொண்டு உலர்ந்தது) 5
11. நாகத்தகடு 5'x1' (அளவு) 1 எண்ணம்
12. நீள கைப்பிடி கொண்ட சட்டுவம் 1 எண்ணம்
13. முறம் (அளவு) 1 எண்ணம் (தீ பற்றவைக்க மற்றும் வீசுவதற்கு)

### தயார் செய்தல் (செய்முறை விளக்கம்)

1. பச்சை அரிசியை ஊறவைத்து உரலில் நன்றாக இடித்து (புட்டு மாவு பக்குவத்துக்கு) மாவாக்கி பின் நிழலில் உலர்த்தவும். (ஊறவைத்த 750 கிராம் அரிசி மாவாகி உலர்ந்தவுடன் ½ பக்கா (ஒரு நாளி) மாவிற்கும் சற்று கூடுதலாக கிடைக்கும்.)

2. ஒரு ராத்தல் சர்க்கரையை (450 கிராம்) துண்டுகள் இல்லாதவாறு உரலில் போட்டு இடித்து தனியாக எடுத்து வைத்துக்கொள்ளவும்.

3. ஒரு தேங்காயை துண்டுகள் இல்லாதபடி மெல்லியதாக துருவிக்கொள்வதோடு துருவிய தேங்காயினை (இரு